# திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன் M.L.C.


**தலையங்கம்**

# தமிழ் மாநில முதலமைச்சருக்கு...!

மதுரையில் "சரசுவதி வித்தியாலயா" என்ற பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்து 36 மாணவிகள் பரிதாப மரணத்துக்கு இரையானார்கள். 137 பேர், படுகாயமுற்று மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கோரச் சம்பவம், அரியலூர் ரயில் விபத்தைவிட கொடியது என்று கூறினால் மிகையாகாது. உயிர் நீத்த 36 மாணவிகளும் அந்தந்தக் குடும்பங்களின் எதிர்கால ஒளிவிளக்குகளாய்த் திகழக்கூடிய பிஞ்சுப் பருவத்தை அடைந்தவர்களாகும்.

தங்களின் அருமைச் செல்வங்கள் கல்வித்துறையில் தேறியதும் இன்னின்ன துறைகளில் ஈடுபட்டுத் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும், வாய்ப்பு கிடைத்தால் நாட்டுக்கும் பெருமையைத் தேடித் தருவார்கள் என பெற்றோர்கள் ஆசை கோட்டை கட்டியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஏழையானாலும் பணக்காரரானாலும் இவ்வித எண்ணம் ஏற்படுவது இயற்கையேயாகும். அதிலும் அப்பள்ளியில் பெரும்பாலும் ஏழை—நடுத்தர வகுப்பைச் சார்ந்த மாணவிகளே கல்வி பயின்று வருவதாகத் தெரிகிறது. அந்த ஏழைப் பெற்றோர்கள் தங்கள் உள்ளத்தில் வளர்த்துவந்த ஆசைகளனைத்தும் ஒரு நொடியில் தூள் தூளாய்விட்டது இதை எண்ணுந்தோறும் நமது உள்ளம் துடிக்கிறது. தங்களின் அருமைச் செல்வங்களைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் பெற்றோர்களை யாரும் எந்தவிதத்திலும் ஆறுதல் கொள்ளச் செய்வதென்பது எளிதான காரியமல்ல. அவர்கள் உள்ளத்தில் விழுந்த இந்த வடு அவர்களது வாழ்நாள் வரையில் மறக்க முடியாததாகும். சில நாட்கள் நோய்வாய்ப்பட்டோ, அல்லது வயது முதிர்ந்தவர்கள் என்ற அளவிலோ ஒருவர் இயற்கை யெய்திவிட்டால் கூட அத்துக்கத்தைத் துடைத்துக் கொள்வதென்பது கடினமாயிருக்கிறதென்றால் தங்களின் குடும்பப் பொக்கிஷங்களைப் பதைக்கப் பதைக்க பறிகொடுத்து தவிக்கும் பெற்றோர்களை உற்றார்—உறவினர்களை நாம் எவ்வாறு ஆறுதல் பெறச் செய்யமுடியும்?




"சரசுவதி வித்யாலயா" என்ற இப்பள்ளி அரசினரின் மானியம் பெற்று நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. பொதுமக்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து சர்க்கார் மூலமாக மானியம் பெற்று பள்ளியை நடத்திவரும் நிர்வாகிகளும், மானியம் தரும் சர்க்காரும், குறிப்பாக கல்வி இலாகாவினரும் இந்த விபரீத சம்பவத்தைப் பற்றி தக்க பதில் கூறக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

மிகப் பழைய கட்டிடத்தின் மீது புதிய மாடியை நிறுவ யார் உடந்தையாயிருந்தார்கள் என்பதை தயவு தாட்சண்யமின்றி கண்டு பிடித்தாகவேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற அலங்கோலம் வளர்ந்து வருகிறது. பள்ளி நிர்வாகத்திலிருந்து பதுக்கல் காரியங்கள் வரை, அதிகார பீடத்திலுள்ளவர்களின் பெயர்களைச் சொல்லியும், அந்த அமைச்சர் எனக்குக் கட்டுப்பட்டவர், இந்த அமைச்சர் என்னால் வாழ்ந்தவர் என்றெல்லாம் கூறிக்கொண்டும் சிலர் காட்டு தர்பார் நடத்தி வருவதை நாடு அறிந்ததேயாகும்.

'சரசுவதி வித்தியாலயா' பள்ளியின் மீது மாடி அமைத்தல் கூடாது என்று மதுரை நகரசபை மறுத்துங்கூட மாடி எழுப்பப்பட்டிருக்கிறதென்றால், அங்கு ஒரு நகரசபை ஏன், அதிகாரிகள் ஏன் அதற்கு மேலாக கோடிக்கணக்கான செலவில் அமைச்சர்கள் ஏன் என்று கேட்கிறோம்.

அப்பள்ளியின் கட்டிடத்தின் மீது மாடி எழுப்பப்பட்டது 1961ஆம் ஆண்டிலிருந்து என்று தெரிகிறது. ஆனால் மாடியை அமைக்கக் கூடாதென்று மதுரை நகரசபை அதிகாரிகள் மறுத்திருப்பதாகவும் தெரிகிறது. அதற்குப் பிறகு எவ்வாறு மாடி அமைக்கப்பட்டது என்பதை நகரசபை அதிகாரிகள் இதுவரை கவனிக்காதது ஏன்? தங்களின் உத்திரவை மீறி மாடியை அமைப்பதற்குக் காரணமாயிருந்த அந்த அதிகாரம் படைத்தவர்கள் யார்? இது சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சரின் கவனத்திற்கு இப்பிரச்சினை கொண்டு போகப்பட்டதா? அல்லது அமைச்சர்களிடம் முறையிட்டும் கவனிக்கப்படவில்லையா? இல்லையென்றால் நகரசபை அதிகாரிகள் இதுவரை ஏன் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை? நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு குறுக்கிட்ட அதிகாரச் செல்வாக்கு படைத்தவர்கள் யார்? அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் "இவ்வளவு மோசமான கட்டிடத்தின் மீது மாடி அமைக்க உத்திரவிட்டது யார்" என்ற கேள்வியை எழுப்பி வருந்தியிருக்கிறார். எனவே, இதில் அடங்கியுள்ள இரகசியங்கள் தான் என்ன? இவையனைத்தும் இப்போது நடைபெற்று வரும் விசாரணையிலிருந்தாவது வெளியாகி இனி இதுபோன்ற தலைவிரி கோலம் நாட்டில் எந்தப் பகுதியிலும் எந்தத் துறையிலும் யாரும் ஈடுபட முடியாத வகையில் கண்டிப்பான நடவடிக்கையும் முறையும் மேற்கொள்ள வேண்டியது முதற் கடமையாகும்.

காங்கிரஸ் ஆட்சியில், ஏழை — நடுத்தர மக்களின் வாழ்வுஅடியோடு சீர்குலைந்து வருவது போதாதென்று, இதுபோன்ற அநீதிகள் மிகத் துணிவாகச் செய்யப்பட்டுவருகின்றன. அதிலும் சிறிதுகாலமாக கல்வி இலாகாவைப் பொறுத்த


(அடுத்த பக்கம் பார்க்க)



11—4—64
8 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

தலையங்கம் தொடர்ச்சி.........

வரையில் சீர்கேடுகள் தலைதூக்கி நிற்கின்றன. இதற்கு காரணம் என்னவென்று நமக்கு விளங்கவில்லை.

"பள்ளிச் சிறுவர்களுக்கு அளிக்கும் உணவில் பாம்பு இருந்ததாகச் செய்திவந்தது. வினாத் தாள்கள் வெளிவந்த படலம் ஊர் சிரிக்கும்படியாகிவிட்டது. இப்போது, மதுரைச் சம்பவம் எல்லோரது உள்ளத்தையும் நடுங்க வைத்திருக்கிறது. இவ்வாறு ஒன்றின்பின் ஒன்றாகத் தவறுகள்—மன்னிக்கமுடியாத தவறுகள் நடைபெறுகிறதென்றால், இதற்கு யார் குற்றவாளிகள் என்பது விசாரித்தறியவேண்டிய ஒன்று என்றாலும் குறிப்பாக கல்வி இலாகாவுக்குப் பொறுப்புடைய கனம். முதலமைச்சர் அவர்களே முன்வந்து கழுவாய் தேடிக்கொள்ளவேண்டும். அதுதான் சனநாயக முறைக்கு ஏற்றதுமாகும். மனிதாபிமானம் நிறைந்த செயலாகும்.

கல்வி இலாகாவைப் பொறுத்த தவறுகளைப்பற்றியோ அல்லது பொதுவாக மற்ற துறைகளைப்பற்றியோ சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினர் கேள்விகளைக் கேட்கும்போது கனம். அமைச்சர்கள் பதில் அளிக்கும் முறையே அலாதியாயிருக்கிறது. கட்சிப் பிரதி கட்சி என்ற முறையில் பதில் கூறுவதைவிட பிரச்சினையின் தன்மையை மனமார உணர்ந்து விளக்கம்தரும் வகையில் அமைச்சர்கள் பதில் அளிக்கவேண்டியது இன்றியமையாததாகும். கேள்வித் தாள்கள் வெளியானதைக் குறித்து எதிர்க்கட்சியினர் கேட்ட கேள்விகளுக்கு கனம். முதலமைச்சர் பதில் தந்தமுறை, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்று கூறினால் மிகையாகாது. கனம். அமைச்சர்கள் தரும் பதில்களின் தன்மையைப் பொறுத்துத்தான் சம்பந்தப்பட்ட எந்த ஒரு இலாகாவாயினும் மேலும் கண்காணிப்புடன் பணியாற்ற துணைசெய்வதாக அமையும். நிர்வாகமும் கூடுமான அளவு ஒழுங்குற நடைபெறும். அதற்கு பதிலாக எதிர்க்கட்சியினர் கேட்கும் கேள்விகளுக்கு வீருப்பாக பதில் கூறுவதால் தங்கள் நிர்வாகத்திற்குத் தாங்களே தெரிந்தோ தெரியாமலோ கேடு விளைவித்துக்கொள்வதாக முடியும்.

ஆதலின் மதுரை பள்ளி விபத்துக்கு காரணம் யார் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டிய முதல் பொறுப்பு முதலமைச்சரையே சாரும். அவரது ஆட்சியில் யார் மூலமாக பெருமை ஏற்பட்டாலும் அவருக்கே உரித்தாகிறது போலவே ஒருவருடைய செயல் மூலமாக தவறு ஏற்பட்டாலும் அத்தவறுக்கும் அவரே பதில் கூறவும் கழுவாய் தேடவும் கடமைப்பட்டவராகிறார்.

கனம். முதலமைச்சர் மீது நமக்கு எவ்வகையான தனிப்பட்ட காழ்ப்பும் கிடையாது. அவ்வாறு இருக்கவேண்டிய அவசியமுமில்லை. இன்னும் சொல்லப்போனால் அவரது கொள்கைக்கும் நமது கொள்கைக்கும் எவ்வளவு வேறுபாடுகளிருப்பினும் அவர் பொதுவாக நாட்டுக்கு ஆற்றியுள்ள தொண்டுக்கு மதிப்பும் மரியாதையும் என்றும் காட்டக் கடமைப்பட்டவர்களாவோம். ஆகவே நாம் சொல்லப்போகும் அபிப்ராயம் கடுமையானதாயிருப்பின் அது மனத்தூய்மையுடன் சொல்வதாக எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாது, கட்சிப் பிரதி கட்சி என்ற முறையில் கனம். முதலமைச்சர் எண்ணக்கூடாது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரியலூர் ரெயில் விபத்து ஏற்பட்டபோது அன்று ரெயில்வே அமைச்சராயிருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், அச்சம்பவத்திற்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஏற்பட்ட தவறுக்கு தாம் கழுவாய் தேடிக்கொள்ளும் வகையிலும் உடனடியாக தமது பதவியை ராஜினமா செய்தார். ரெயிலை ஓட்டிச் சென்ற டிரைவருக்கும், திடீரென்று ஏற்பட்ட அடைமழை வெள்ளத்தினால் பாலம் உடைந்துவிட்டதற்கும், அமைச்சர் லால்பகதூருக்கும் உடனடியான தொடர்பு ஒன்றுமில்லையெனினும் தனது இலாகா இவ்வாறு பெரும் அநீதிக்குக் காரணமாயிருந்ததேயென்று வருந்தி அதற்காக தாமே கழுவாய் தேடிக்கொண்டார்.

மதுரை பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்த விவகாரத்தில் அதிகார வரம்பை மீறி மனதார தெரிந்து தவறு செய்திருக்கிறார்கள். நகரசபை அனுமதி தர மறுத்திருப்பதை மீறி தனிப்பட்ட செல்வாக்கினால் குறுக்கு வழியில் சலுகை பெற்று மேல் மாடி அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வித பெரும் அநீதிக்குக் காரணமாயிருந்தவர் யாரானாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும். குறுக்கு வழியில் செல்வாக்குப் பெற்று இக்காரியத்தைச் செய்தவர்களை அம்பலப்படுத்த இயலவில்லையென்றால், கனம். முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தமது பதவியிலிருந்து விலகி, அதன் வாயிலாக தவறு செய்தவர்கள் வெட்கித் தலை குனியவும், இனி இது போன்ற அத்து மீறிய அநீதிகள் நடைபெறாதிருக்கவும் வழிகாட்டியாக விளங்கவேண்டும். முதலமைச்சர் பக்தவத்சலம் நமது இந்த எடுத்துக்காட்டைத் தவறாக எண்ணாமல் செயலாற்ற முற்படுவார் என்று நம்புகிறோம்.

இறுதியாக, கோர மரணத்திற்கு இரையான 36 மாணவிகள் பெற்றோர், உற்றார் உறவினர் ஆகியோருக்கு நம்மால் ஆறுதல் கூறுவதென்பது இயலாத ஒன்றாகும். எனவே அவர்களுடன் சேர்ந்து அத்துக்கத்தை நாமும் பகிர்ந்து கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் நமக்கும் புரியவில்லை. உயரிழந்த மாணவிகளின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தை அழுத கண்ணீரோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏ, காங்கிரஸ் ஆட்சியே! உன் நிர்வாக ஊழலால், நீ இன்னும் என்னென்ன அநீதிகளைச் செய்யயிருக்கிறாயோ, அந்தோ கொடுமை! கொடுமை!!

என். வி. நடராசன்

# "மறக்கலாமோ!"

——(0)——

முப்மன்னர் மடிக்கூடம் தவழ்ந்த செல்வி
முச்சங்க கவியரங்கில் சதிரும் ஆடி
தெம்மாங்கு இசைநரம்பை மெல்ல மீட்டி
தென்றல்தவழ் தென்மலையில் பிறந்து வாழ்ந்து
எம்மொழிக்கும் இல்லாத இனிய யோசை
ஏழிசைபோல் இயல்பாக இலங்கப்பெற்று
செம்மையெழில் துறைதோறும் பயக்கும் நாளில்
சிதைக்கவரும் மொழிக்கொடுமை மறக்க லாமோ!

முத்தமிழின் நயமுறைக்கும் சிலம்பும் பாட்டும்
முக்கனியைப் பிழிந்தெடுத்த கம்பன் பாட்டும்
தத்துவத்தின் பொருளுரைக்கும் சித்தர் பாட்டும்
தக்கமுறை அறமுரைக்கும் குறளின் பாட்டும்
ஒத்தகாதல் உளப்பாங்கின் சங்கப் பாட்டும்
உணர்வெழுப்பி ஒலிசேர்க்கும் புதுவைப் பாட்டும்
நித்தமிரா இந்திவந்தால் பள்ளி எங்கும்
தமிழோசை கேட்காது மறக்க லாமோ!

கருவிழியை கண்ணிமைகள் காத்தல் போலும்
கனிமொழியை காக்கின்ற அன்பில் அண்ணன்
ஒருவிரலை மேலுயர்த்தி ஆணை யிட்டால்
உயர்தமிழர் அவ்வழியை தலைமே லேற்ற
வருதுன்பம் மலைபோல இடைநின்றாலும்
வருகவென வரவேற்கும் பாங்கின் வீரம்
வருந்தமிழர் படிக்கின்ற வரலா றாக
மக்கள்மனம் எழுதுவதை மறக்க லாமோ!

தாயெழிலைக் காப்பதற்கு தணலில் வெந்த
"சின்னசாமி" பெருவீரம் தழல்போல் எங்கும்
போய்பற்றி எரிகின்ற சுடரின் தோற்றம்
புகும்வீரர் இருட்சிறையில் தெரியக் கண்டே
ஓய்வின்றிப் பெரும்பயணம் தொடர்வோர்; மேலும்
ஒளிப்பிழம்பில் நெய்யதனை ஊற்றும் சக்தி
காய்நிலவாய் காவியமாய் இனிக்க நாட்டில்
கற்கின்ற நாள்வருமே மறக்க லாமோ!

கல்லாரும் கற்றாரும் உவக்கும் வண்ணம்
கன்னித்தாய் இளங்கரத்தின் விலங்கு அகற்ற
சொல்லாரும் சுவைதமிழை சிந்தை ஏற்றே!
தண்டமிழிற்கு இயன்றவரை தொண்டும் ஆற்ற
நல்லறிஞர் பேரவைப்பில் அங்கம் பூண்டு
நாட்டோடு மொழிப்பற்றும் கண்ணாய் கொண்டே
தொல்பெருமை காத்திடவே சிறையின் வாயில்
தொடர்பயணம் செய்வோரை மறக்க லாமோ!

ப. வேலழகன்



கற்பனை

# பேசுகிறார்!

# பெரியாரும் - 1967 தேர்தலும்!

பெரியார்: வாங்க சாமி வாங்க, என்ன தடபுடலா வர்ரீங்க, ஏதாவது விசேஷமா?

பெரியாரின் நண்பர்: விசேஷம் ஒன்றுமில்லீங்க. நம்ம எதிர் வீட்டுத் தம்பி தேர்தலிலே ஜெயிச்சுட்டான், அங்கு விருந்துபசாராம், அதில் கலந்துகிட்டு அய்யாவை பார்க்கலாம்னு இப்படியே வர்ரேனுங்க!

பெரி: எதிர்வீட்டுத் தம்பின்னு காங்கிரஸ்காரரா அல்லது ...?

பெ. நண்: கழகத்துக்காரருங்க! மூவாயிரம் வோட்டு வித்தியாசத்திலே காங்கிரசே தோற்கடிச்சுதுங்க அந்தத் தம்பி, இன்றைக்கோடே சேர்த்து ஆருவது விருந்துங்க அய்யா!

பெரி: நாசமாப் போச்சு, கண்ணீர்த்துளி பசங்க வெற்றி விருந்துக்கா போயிட்டு வர்ரீங்க!

பெ. நண்: ஆமாங்கய்யா, ஏன் போகக் கூடாதா?

பெரி: நல்ல கதையாயிருக்கு, ஏன் அவனுங்க விருந்துன்னு ஜீரணிக்காதா என்ன? அதுக்கு சொல்லலே! இந்தப் பசங்க ஜெயிச்சாலும் ஜெயிச்சானுங்க ஊரெங்கும் விருந்தும் வைபவமா போச்சு!

பெ. நண்: ராஜாஜி சொல்லியிருக்கிறார், படிச்சிங்களாய்யா! விருந்துகளெல்லாம் போதும், காரியத்திலே இறங்குங்கன்னு!

பெரி: ஆச்சாரியாருக்கு தின்கிறதுக்கு வயிறில்லேன்னு அதற்காக விருந்தே வேண்டாமென்று சொல்றது.

பெ. நண்: அய்யா ஏதாவது காங்கிரஸ் வெற்றி விருந்துக்கு போனீங்களா?

பெ: காங்கிரஸ்காரனுங்கதான், பாப்பாத்தியம்மா உப்புகண்டம் பறி கொடுத்த மாதிரி விழிக்கிறுங்களே, இதிலே விருந்து கேடா?

பெ. நண்: வரவர கழகத்துக்கு தெசை திருப்புதுங்க அய்யா!

பெரி: தெசையாவது வெங்காயமாவது. அவனுங்க புத்திசாலி பசங்க, என்ன யிருந்தாலும் நம்மகிட்ட பாடம் கேட்டவனுங்கதானே! சமாளிக்கிருனுங்க!

பெ. நண்: பாருங்கய்யா, ராஜாஜி சொன்னரு விருந்து வேண்டாம்னு, அதைக் கருணநிதியும் ஓரளவு ஆதரித்துப் பேசினரு, பிறகு பேசிய என். வி. நடராசன், இப்படி ஓட்டல்களில் விருந்து வைச்சா எல்லாரும் வரவேண்டியிருக்கிறது. அதனல் எல்லோருக்கும் நேரம் வீணுகுது. ஆதலாலே விருந்து யாருக்கு நடத்த விருப்பமோ அவர்களை மட்டும் வீட்டுக்கு அழைத்து விருந்து வைக்கலாம்னு சொன்னர்.

பெரி: நல்ல யோசனைங்க பின்ன என்னவாம்! வெற்றி பெற்றவர்களும் என்னைப் போலயிருக்கிறவங்களும் மட்டுமிருந்தால் போதாதா? நடராசன் சொன்னதை நான் மனமார வரவேற்கிறேனுங்க.

பெ. நண்: மற்றதையும் கேளுங்க அய்யா, அடுத்தபடியா பேசின சி பி. சிற்றரசு சொன்னரு, வீட்டிலே போய் சாப்பிட்டாகூட நேரமாகும், பொட்டலமா கட்டி நமக்கு அனுப்பிச்சிட்டா நாம் சாப்பிடலாம், நேரமும் மிச்சமாகும் என்றுர்.

பெரி: பொட்டலமா கட்டி அனுப்புறதலே ஒரு ஆபத்து இருக்கு! உதாரணமா பிரியாணி பொட்டலம் அனுப்புவதாக வச்சிக்கிங்கோ, வெறும் சாதம் மட்டும் நிறைய கொட்டிவெச்சிட்டு கரியேஇல்லேன்னு யாரை போய்க் கேட்பது? ஆதலாலே வீட்டிலே அழைச்சி விருந்து வைக்கச் சொல்றதுதான் லாபம்!

பெ நண்: அப்ப நம்ம வீட்டிலே எதிர்வீட்டுத் தம்பிக்கு விருந்துவைக்கலாம்னு நினைக்கிறேன். அய்யா வரவேணும்.

பெரி: இதற்கு எதற்காக இவ்வளவு வேண்டுதல்; கண்ணீர்த்துளிக்கு வைக்கிற விருந்துன்னு உடம்புக்குப் பிடிக்காதா என்ன? பேஷா வர்ரேன். நல்லா செய்யுங்க.

மணியம்மை: ஏம்பா, உங்களுக்கு ஏதாவது யோசனையிருந்து சொல்றீங்களா அல்லது எங்கேயோ கவனம் வச்சிகிட்டு சொல்றீங்களா?

பெரி: நல்லா கவனமாத்தான் சொல்றேன். கண்ணீர்த்துளி கட்சிக்காரன் வெற்றி பெற்றதற்கு நடத்தப்போகும் விருந்துலேதான் கலந்துகொள்ளப் போகிறேன்.

மணியம்மை: யாராவது பார்த்தா என்னப்பா சொல்லுவாங்க?

பெரி: சொல்றது என்னவாம்! காங்கிரஸ்காரன் நமக்கு சோறு போட்டுருன்னு, நம்ம நாலு நல்ல வார்த்தை அவனைப்பற்றி பேசுவோம்னு நினைச்சி! கண்ணீர்த்துளி அப்படியல்ல, சாப்பாடு முடிந்ததும் பொதுக்கூட்டத்திலே அய்யா நம்மெ திட்டத்தான் போருருன்னு மனசார தெரிஞ்சிதான், விருந்து வைக்கிருன். இந்த சாப்பாடுதான் எனக்கு மனசு பிடிச்ச சாப்பாடு, தெரிஞ்சிக அம்மா!

பெ. நண்: காமராசர் கோபம் செய்துகொள்ள மாட்டாரே!

பெரி: காமராசராவது வெங்காயமாவது. எவன் கேட்கிறவன்? இந்தக் காங்கிரஸ்காரனுங்க யோக்கியதைக்கு கேள்வி ஒரு கேடா? வெங்காய பிரியாணியா தயார் பண்ணுங்க சாமி! நானும் மணியும் வர்ரோம்!

மணி: போப்பா, நான் வரமாட்டேன்!

பெரி: சனியன் தொலைஞ்சுது! நமக்கும் பிரியாணி அதிகமா கிடைக்கும்! இதோ பாரம்மா பிரியாணிக்கும் பாலிடிக்ஸுக்கும் என்னம்மா விரோதம்! பைத்தியக்காரப் பொண்ணு!

மணி: கண்ணீர்த்துளிங்க நம்மெ அழைக்காமலா நாம் போறது!

பெரி: நீ என்ன அசடாயிருக்கிறியே, நம்ம அய்யா வீட்டிலே அவங்களுக்கு விருந்துன்னு, அவங்களா நம்மை அழைப்பாங்க? அவசரப்படாதே, அவங்களும் அழைக்கத்தான் போருங்க. நாமும் போகத்தான் போறேம்; 1967 தேர்தல் வெற்றி விருந்துக்கு, சரிதானு?

(தொடரும்)

—கூத்தரசன்

## பேசின்பிரிட்ஜ் பகுதி தி. மு. க.

——(0)——

பேசின்பிரிட்ஜ் பகுதி தி. மு. கழக சார்பில் 7—4—64மாலை 7 மணிக்கு சென்னை 28-வது வட்டத்தில் மாபெரும் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பகுதிச் செயலாளர் டபிள்யூ பி. பி. சுந்தரம் தலைமை வகித்தார். தமிழக சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், மேயர் கிருஷ்ணமூர்த்தி, துணை மேயர் கபாலமூர்த்தி, பேசின்பிரிட்ஜ் பகுதியில் மாநகராட்சி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள் வேணுகோபால், (21-வது வட்டம்) மோகனரங்கம் (22-வது வட்டம்), ஆறுமுகம் (23-வது வட்டம்), எஸ். எம். துரைராஜ் (24-வது வட்டம்) ஆகியோரைப் பாராட்டி வாழ்த்திதழ்கள் வழங்கப்பட்டன. பல கிளைகளின் சார்பில் கைத்தறி துண்டுகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

நாவலர் நெடுஞ்செழியன் சிட்டிபாபு, எம். ஆர். கண்ணன் வெ. சானகிராமன், கே. எஸ். தினகரன் ஆகியோர் வெற்றி பெற்ற தோழர்களைப் பாராட்டியும் வரவேற்றும் பேசினர்.

தோழர் என். வி. என்., மேயர் உள்ளிட்ட வெற்றி பெற்ற தோழர்களும் நன்றி தெரிவித்துக் கொள்ளும் வகையில் பேசினர்.

○

# வெண்ணுடை வேந்தர் கோட்டத்தில் வெற்றி விழா !

——(0)——

## வடசென்னையில் வரலாற்றுச் சிறப்புமிகுநிகழ்ச்சி!

வெற்றி பெற்ற மாநகராட்சி உறுப்பினர்களுக்குப் பாராட்டும், கழகத் தலைவர்களுக்குக் கேடயம் பரிசளிப்பு விழாவும், சென்னை-வண்ணையம்பதியிலுள்ள மீனாட்சியம்மன்பேட்டையில் நடைபெற்றது.

5—4—64 மாலை 4-மணிக்கு, முதல்வட்டத்திலிருந்து மாபெரும் ஊர்வலம், யானை முன்னே செல்லப் புறப்பட்டது.

ஊர்வலத்தில், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், கொள்கைபரப்புச் செயலாளர் டாக்டர் சத்தியவாணிமுத்து, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, துணை மேயர் கபாலமூர்த்தி, மாநகராட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பொதுக்கூட்டத்திற்கு சென்னை மாவட்ட தி.மு.க, அவைத் தலைவர் காஞ்சி. மணிமொழியார் தலைமை வகித்தார்.

தோழர்கள் கே. எம். கண்ண கண்ணபிரான், ஆலடி அருணா, துணை மேயர் கபாலமூர்த்தி ஆகியோர் பேசினர்.

பொருளாளர் மு. கருணாநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், கொள்கைபரப்புச்செயலாளர் டாக்டர் சத்தியவாணிமுத்து ஆகியோருக்குநடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, கேடயங்கள் வழங்கினார்.

டாக்டர்

### சத்தியவாணிமுத்து

கொள்கைபரப்புச் செயலாளர் சத்தியவாணிமுத்து பேசியதாவது:—

"அகில இந்திய காங்கிரசுத் தலைவரே சேரி சேரியாக வந்து மாநகராட்சித் தேர்தலில் ஓட்டு கேட்டார். பண பலத்தைக் காட்டினார்கள்— பயமுறுத்தினார்கள்— ஆனாலும் தோற்றார்கள் !

இனி காங்கிரசு படிப்படியாக அழிந்துவிடுமே தவிர, அதற்கு உய்வில்லை.

12 நகரசபைகளில் இளித்த வாய்த்தனமாகக் கோட்டை விட்ட காங்கிரசா எங்களைப் பார்த்துக் கேலி பேசுவது ?

"இனி, காங்கிரசு இருந்தால் பயனில்லை" என்று காங்கிரசுக்காரர்களே கருதிய காரணத்தால் தான், டில்லி மாநிலங்களவைத் தேர்தலிலும், பொள்ளாச்சித் தேர்தலிலும் கழகத்திற்கு ஓட்டுப் போட்டார்கள் ! இது காங்கிரசுக் கட்சி கலகலத்துவிட்டதைத்தான் காட்டுகிறது!

மதுரையில் பெண்கள் பள்ளிக் கட்டிடம் இடிந்து வீழ்ந்ததும் இதைத்தான் காட்டுகிறது.

அன்றொரு நாள் மதுரையைக் கண்ணகி எரித்தாள்.

இன்று பெண்களை இழந்த தாய்மார்கள் வயிறு பற்றி எரிவது போல், இந்த ஆட்சியும் எரியத்தான் போகிறது !

பெண்களின் சாபம்—அதுவும் பிள்ளைகளைப் பெற்றெடுததவர்களின் சாபம் பலிக்காமல் போகாது !

அமைப்புச் செயலாளர்

### என். வி. நடராசன்

அடுத்து அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் பேசியதாவது :—

"எங்களுக்குக் கேடயங்கள் அளித்தார்கள். நாங்கள் மட்டுமல்ல, இந்தப் பாராட்டுக்குரியவர்கள் !

நாங்கள் வெறும் அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்பட்ட கட்டிடங்கள்தான். அஸ்திவாரம்போல் இருப்பவர்கள் கழகத் தொண்டர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் ஆவார்கள். அவர்களுக்குத்தான் இந்தப் பாராட்டு உள்ளபடியே உரித்தாகும் !

தி. மு. கழகத்தின் வளர்ச்சி, கூட்டு முயற்சியின் வெற்றி— கூட்டுப் பணியின் வெற்றி !

இத்தகைய கூட்டுறவு உணர்ச்சியை ஏற்படுத்தியது அறிஞர் அண்ணா அவர்கள்தான்!

அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற தடவை சிறைமீண்டு வந்தபோது திருச்செங்கோடு தேர்தல் வெற்றியைவிடப் பெரிதும் பாராட்டிய செயல், கழக உறுப்பினர்களின் —கிளைகளின்— சார்பு மன்றங்களின் தொகையை அதிகப்படுத்திக் காட்டியதுதான். ஆகவே, நாளையதினம் முதற்கொண்டு இந்தப் பணியில் ஈடுபட வேண்டும்.

பொருளாளர்

### மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி பேசியதாவது:—

"எங்களுக்கெல்லாம் தோழர்கள் கேடயம் அளித்துப் பேசினார்கள்.

கேடயம் அளிக்கிறார்கள் என்றாலேயே, 'எதிரிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கிறது' என்பதுதான் பொருள். அந்தத் தாக்குதல்களைத் தாங்கவேண்டும் என்பதற்குத்தான் இந்தக் கேடயங்கள்.

#### அண்ணாவின் அறிவுரை அதுவல்லவே!

எதிரிகளைத் தாக்கவேண்டும் என்றிருந்தால் தோழர்கள் கணைத் தந்திருப்பார்கள்; வில் தந்திருப்பார்கள்; வேல் தந்திருப்பார்கள்!

எதிரிகள்மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற அறிவுரை, நமது அறிஞர் அண்ணா அவர்களால் அனுமதிக்கப்படாத அறிவுரை.

உங்களுடைய திருக்கரங்களால் தரப்பட்டு எங்களுடைய கரங்கள் பெற்றுக்கொண்ட இந்தக் கேடயங்களை, அறிஞர் அண்ணாவின் காலடியில் வைத்து வணங்கி, 'நீங்கள் தந்த பரிசு இவை' என்று கூறிட நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்கள்.

பெருமைமிகு வெற்றிகளை நாம் இன்றையத் தினம் பெற்றிருக்கிறோம்.

1959ம் ஆண்டில் நமது கழகம் பெரும்பான்மையாக உள்ள நகராட்சி மன்றங்கள் இல்லை.

சென்னை மாநகராட்சியில் மட்டும்தான் நமது கழகத் தோழர் மாநகராட்சித் தலைவராக வீற்றிருந்தார்.

இடையில் ஏற்பட்ட சூழ்நிலை மாற்றங்களால் உடுமலைப்பேட்டையில் நமது கழகத் தோழர் சாதிக் பாட்சா நகரமன்றத் தலைவரானார்

எனவே நாம், 1959ம் ஆண்டு நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில் நகராட்சிகளைக் கைப்பற்றித் தலைவர்களாக அமரவில்லை. ஆனால் இன்றையத் தினம், 12 இடங்களில் தி. மு. கழகத் தோழர்கள் நகராட்சித் தலைவர்களாக இருக்கிறார்கள்.

புராணீகர்கள் பாஷையில் சொல்லவேண்டுமானால் 12 ஆழ்வார்கள்'

மாநகராட்சியில் இன்னும் இரண்டு மூன்று பேர் இருந்தால் 63 பேர்—அதாவது அறுபத்து மூன்று நாயன்மார்கள்!

இத்தகைய வெற்றிகள் மேலும் உருப்பெற உங்களுடைய செயல் பூர்வமான ஒத்துழைப்பு எப்போதும் தேவை:

நமக்கு வெற்றி கிடைக்கும் இதே நேரத்தில் காங்கிரசுக்கு காமராசருக்கு தோல்வி மேல் தோல்வி கிடைக்கிறது!

காமராசரைப் போன்ற அரசியல் தெளிவில்லாதவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைதான் ஏற்படும்.

கடலை சாப்பிடுவதைப் பார்த்திருப்பீர்கள். முதலில் நல்ல கடலையாக — சாப்பிட்டுவிட்டு, கடைசிக் கடலையைச் சாப்பிடும்போது அது எண்ணெய்க் கடலையாக— கசப்புக் கடலையாக இருக்கும். அந்தக் கசப்புச் சுவையைப் போக்க, அடுத்தவர் வைத்திருக்கும் கடலையில், 'நல்ல கடலை ஒன்று தா' என்று கேட்டு வாங்க வேண்டிய நிலை இருக்கும்.

அதுபோலத்தான், அரசியலில் இதுவரையும் நல்ல கடலையைச் சாப்பிட்டுவந்த காமராசர், இப்போது கசப்புக் கடலையை சாப்பிடத் துவங்கி யிருக்கிறார்.

அந்தக் கசப்புச்சுவை போக காமராசர் அடுத்தவரிடம் ஒரு நல்ல கடலை கேட்டாலும் கொடுப்பதற்கு ஆளில்லாத நிலைமை உருவாகி வருகிறது."

நடிப்பிசைப் புலவர்

### கே. ஆர். இராமசாமி

கழகத் தலைவர்களுக்குக் கேடயம் அளித்த நடிப்பிசைப் புலவர் பேசியதாவது:—

"எத்தனையோ பொருளைச் சம்பாதித்திருக்கிறேன்; ஆனால், ஊர்வலத்தில் வந்தபோது கழகத் தோழர்கள் காட்டிய ஆர்வத்தைக் கண்டு பெருமகிழ்வுற்றேன். அந்தத் தோழர்களில் ஒருவருடைய ஆர்வத்திற்கு ஒரு இலட்சம் ஈடாகும் ! இதைவிட பெரிய சம்பாதனை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

○

## குறள்நெறி மன்றம்

25-வது வட்டத்தில் தி. மு. கழகச் சார்பு மன்றமாக துவங்க இருக்கும் குறள்நெறி மன்றத்தின் முதல் பொதுக் குழுக் கூட்டம் 1—4—64 அன்று இரவு 8 மணியளவில் நடைபெற்றது.

அதுபோது குழுவில் மன்றத்திற்கான நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. வந்திருந்த அனைவரையும் தோழர் வ. பா. இளங்கோவன் வரவேற்று 25-வது வட்ட தி. மு. க. செயலாளர் தோழர் மா. ரா. ஏழுமலை அவர்களை ஆணையாளராக இருந்து நிர்வாகிகள் தேர்வை நடத்திக் கொடுக்குமாறு முன்மொழிய— தோழர் அறிவுடைநம்பி வழிமொழிந்தார்.

அதன் பின் நிர்வாகிகள் தேர்வில் கீழ்க்கண்டவர்கள் போட்டியின்றித்தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் உலகநாதன், செயலாளர் வா. பா. இளங்கோவன், துணைச் செயலாளர் என். இறைமுடி, பொருளாளர் சி. ஜி. இராதாகிருட்டினன், மற்றும் எழுவர் செயற்குழுவினர்கள்.

தேர்தலை முடித்துவைத்து வட்டச் செயலாளர் நீண்டதோர் அறிவுரையை அளித்து மன்றத்தை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்றும் கழகத்திற்கு வலிவு தேடி தரும் வகையில் அண்ணாவின் அன்பு பாசறையில் நின்று பணியபுரிய வேண்டும் எனறும் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் இறைமுடி நன்றி நவின்றார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் ராதாகிருட்டிணன், முத்தப்பன் ஆகியோர் தேநீர் வழங்கினர்.

# காமராசருக்கு கூத்தரசன் மடல்

பேரன்புடையீர், வணக்கம்.

தாங்கள், காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணியினை நாடு அறிந்ததேயாகும். தங்களுக்கும் எனக்கும் கொள்கை வேறுபாடுகளிருப்பினும், தாங்கள் பொதுப்பணியில் அயராது ஈடுபட்டு வருவது கண்டு தங்களைப் பாராட்டுகிறேன்.

தேர்தல் வேலையில், தாங்கள் வீராதி வீரர்—சூராதி சூரர் என்று கருதப்பட்டு வந்தது எந்த அளவுக்கு உண்மையென்ற ஆராய்ச்சியில் இறங்க நான் விரும்பவில்லை. ஏனெனில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபட்டதிலிருந்து தங்களின் "தேர்தல் புகழ்" என்பது வெட்டவெளிச்சமாகி வருகிறது.

அதிலும் குறிப்பாக சென்ற பொதுத்தேர்தலில் 5 இடங்களில் கூட தி. மு. க. வெற்றி பெருது என்று சவால் விட்டீர்கள். ஆனல் கழகம் 50 இடங்களில் வெற்றி பெற்றது. அன்றே நீங்கள் கழக வளர்ச்சியை உணர்ந்து நடந்திருக்க வேண்டும். ஆனல் ஏதோ கழகத்திற்கு குருட்டார்போக்கில் கிடைத்த வெற்றி என்று கேலி பேசினீர்கள்.

அடுத்து எங்கள் அண்ணா அவர்களும் கழக முன்னணி வீரர்களும் கழகத் தொண்டர்களில் பெரும்பாலோரும் விலைவாசி உயர்வு—எரிப்புப் போராட்டத்தில் சர்க்காரது அடக்குமுறையின் காரணமாக சிறைச்சாலைகளில் இருந்த நேரத்தில் திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத்தேர்தல் வந்தது. தி. மு. க.—காங்கிரஸ் நேரடி போட்டி! கழகம் இத்தேர்தலோடு சாய்ந்துவிடும் என்று நீங்கள் மட்டுமா! டெல்லியிலிருந்து அமைச்சர் சுப்ரமண்யமும் சேர்ந்து சவால் விட்டீர்கள். உங்கள் சர்க்காரே, தற்காலிகமாக திருச்செங்கோட்டில் முகாம் அமைத்துக் கொண்டது. பணபலம், அதிகார பலம், ஆள் பலம் அனைத்தும் உங்களிடம்! எங்களிடமோ எந்த பலமும் இல்லை. எங்களின் தனிப்பெரும் சக்தியான அறிஞர் அண்ணாவும் சிறையில்! ஆனாலும் வெளியேயிருந்த கழகத் தோழர்களின் தூய்மையான பணியும், மக்களின் ஆதரவும் சிறையிலிருந்த அண்ணா அவர்களின், அருமைத் தோழர்களின் நல்லெண்ணமும் கழகத்திற்குப் பெருந்துணையாக நின்று சரித்திரப் புகழ் பெற்ற வெற்றியைத் தேடித் தந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலாகிலும் கழகத்தின் சக்தியை தாங்கள் உணர்ந்திருக்க வேண்டும். தாங்கள் உணர முயற்சிக்கவில்லை. முரட்டு பலத்தை மட்டுமே பெரிதென மதித்தீர்களே யல்லாது அரசியல் விவேகத்தை மதிக்கவில்லை.

அதற்கடுத்து திருவண்ணாமலை இடைத்தேர்தல் வந்தது. இந்தத் தேர்தலில் விட்டேனா பார் கழகத்தை, தீர்த்து கட்டி விடுகிறேன் என்று முண்டா தட்டினீர்கள். கோட்டையிலிருந்த சர்க்கார் தற்காலிகமாக திருவண்ணாமலைக்கே குடியேறிவிட்டதோ என்று ஐயப்படும் அளவுக்கு அமைச்சர்களின் கூட்டமும், ஆள் பலமும், பண பலமும் ஒன்று சேர்ந்து எதிர்த்தது. கழகத்தின் பக்கம், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலும், கழகத் தோழர்களின் உழைப்பும் நின்றன! இறுதியாக திருவண்ணாமலையிலும் கழகத்திடம் நேரடி தோல்வி! இதற்குப் பிறகாவது கழகத்தை மதித்து நடக்கவேண்டுமல்லவா தாங்கள்! அதுதான் தங்களிடம் கிடையாதென்று கூறுகிறார்களே! பண பலமும் அதிகார பலமும் கொண்டு எதையும் சாதித்துவிடலாம் என்ற கணக்கு இனி அரசியல் உலகில் எடுபடாது என்பதை உணரும் அரசியல் தெளிவு தங்களுக்கு எட்டவில்லை. எனவே தவருன பாதையிலேயே செல்லத் துணிந்தீர்கள்.

அடுத்து நகராட்சி—மாநகராட்சித் தேர்தல்கள் வந்தன. அதிலேயுங்கூட சரியான கணக்கு உங்களால் போட முடியவில்லை. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்! அதுமட்டுமல்லாமல் அரசியல் உலகில் செல்லாக் காசென தூக்கி எறியப்பட்டவைகளைத் தாங்கள் உடன்பாடு என்று சேர்த்துக்கொண்டு தேர்தலில் குதித்தீர்கள் பாரும்! அடேயப்பா அபாரபுத்தி போங்கள்!

கம்யூனிஸ்டு காம்ரேடுகளுக்கு எப்போதும் தங்கள் சொந்த வலுவில் நின்று செயலாற்றிப் பழக்கமில்லை. அதிலும் இப்போதுள்ள கம்யூனிஸ்ட் தலைமையைப் பற்றி கூறவே வேண்டியதில்லை. தடம் புரண்டு தடம் புரண்டு அலுத்துப் போனவர்கள்! ஆதலால்தான் மற்றவர்களை விட்டு ஆழம் பார்க்கும் செயலில் ஈடுபட்டிருக்கிருர்கள். அவர்களின் இந்த ஆசைக்கு அனைத்திந்திய காங்கிரஸ் தலைவராகிய தாங்கள் அதிகாரபூர்வமாக இடங் கொடுக்காமல், தனிப்பட்ட முறையில் அவர்களின் ஆசாபாசத்திற்கு காங்கிரசும் அல்லது காங்கிரசின் ஆசாபாசத்திற்கு கம்யூனிஸ்டுகளும் அடிமைப்பட்டார்கள். போதாக்குறைக்கு வாலறுந்த நரிபோல தமிழ்த் தேசிய கட்சியும் உங்களுடன் கூட்டு சேர்ந்து விட்டதாக விளம்பரப்படுத்திக் கொண்டது. ஆனல் தாங்களோ அவர்கள் யாரையும் நாங்கள் அழைக்கவில்லை, அவர்களாகவே வலிய வந்து ஆதரவு தந்தால் நான் வேண்டாமென்னு சொல்லுவேன்" என்று முணுமுணுத்தீர்கள்.

ஆக இந்த அலங்கோலத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்த கூட்டுதான் சிறந்ததென்றும் தி. மு. க.—சுதந்திரா—லீக் கூட்டு முக்காலிக் கூட்டு என்றும் கேலி பேசினீர்கள். ஆனல் வாக்காளப் பெருமக்கள் எந்தக் கூட்டு நேர்மையானது என்பதற்கு திட்டவட்டமாக தீர்ப்பு கூறி விட்டார்கள் **சென்னை மாநகராட்சியை எப்படியும் கைப்பற்றி விடுவோம்.** என்று தாங்கள் சென்னையில் வாக்குகளை எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் ஐதராபாத்தில் கொக்கரித்தீர். அடுத்த நிமிடமே காங்கிரஸ் மண்ணைக் கவ்விற்று என்ற செய்தி வெளியாகி உங்களது தேர்தல் "ஸ்டண்ட்" என்பதும் சந்தி சிரித்தது.



அதற்குப் பிறகும் உங்களின் தரம் தடம் புரண்டோடிற்று. டெல்லி ராஜ்பசபைத் தேர்தலில் தமிழக சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப நான்கு பேர் நிற்பதற்குப் பதிலாக ஐந்து பேரை போட்டியிடச் செய்து, இறுதியாக காங்கிரஸ் உறுப்பினர்களின் வோட்டுகளை சுதந்திரக் கட்சி வேட்பாளருக்குக் கிடைக்கப் பெற்று, காங்கிரசின் கட்டுப்பாடு என்பது கேலிக் கூத்தாகக்பட்டது.

இவ்வளவு சீரழிவுக்குக் காரணம், தாங்கள் இன்னும் பழைய காமராசராகவே இருப்பதுதான். பழைய காமராசர் என்று கூறுவதால் தவருகக் கருதவேண்டாம். அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர் பீடத்தில் அமர்ந்த பிறகாவது எதிர்க்கட்சிகளின் சக்தியை உணர்ந்து, சனநாயகத்தை மதித்து நடக்கும் பண்பு வளர வேண்டுமென்பதற்காகத்தான் நான் அவ்வாறு குறிப்பிட்டேன்.

எனவே—இனியாகிலும் கழகத்தின் மகத்தான சக்தியை உணர்ந்து நடக்க முற்படுங்கள். எந்தவிதமான தேர்தல் வித்தையும் கழகத்திடம் செல்லுபடியாகாது என்பதையே நான் மேலே எடுத்துக்காட்டியுள்ளபடி தேர்தல் முடிவுகள் உங்களுக்கு நல்லதோர் பாடத்தைப் புகட்டியிருக்கின்றன.

ஆதலின் தாங்கள் வகிக்கும் பதவிக்கேற்ற பண்பும் வளர வேண்டும் என்று மனதார ஆசைப்படுகிறேன்.

•

அன்புள்ள,

**கூத்தரசன்**

## பதவிக்கேற்ற பண்பும் வளரவேண்டும்!

# திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவீர்!

## தமிழகச் சான்றோர்களுக்கு வேண்டுகோள்!

—(○—○)—

தமிழகச் சான்றோர்களே !

"பருவத்தே பயிர் செய்" என்பது தமிழகப் பழமொழிகளில் சிறந்தது. இன்று தமிழ் நாடு இருக்கிறது. அந்நாட்டிற்கும் பெயர் உலகம் உவக்கும் வகையில் தமிழில் இல்லை. தமிழர் அரசோச்சுகின்றனர். ஆனால் தமிழ் நெறி இல்லையே என்பது பலரது ஆவல்.

இந்திய அரசாங்கம் "திருவள்ளுவர் தபால் தலை" வெளியிட்டது. தமிழக அரசாங்கம் சட்டமன்றத்தில் திருவள்ளுவர் "திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து மகிழ்ந்தது. தமிழகத் தலைநகரான சென்னை மாநகராட்சி மன்றம் "திருவள்ளுவர் சிலை" அமைக்க முன்வந்துவிட்டது. இந்த நல்ல தருணத்தில்தான் நாம் சில சிறந்த குறிப்புக்களை தமிழ் மக்கள் முன்வைக்க வேண்டும்.

முதலாவதாக இப்பொழுது திருவள்ளுவர் ஆண்டு 1995 நடைபெறுகிறது. இன்னும் ஐந்து ஆண்டுகளில் திரு. ஆ. 2000 வரப்போகிறது. திரு. ஆ. 2000த்தைத் தமிழக அரசாங்கம் இந்தியா முழுவதிலும் எவ்வளவு சிறப்பாகக் கொண்டாட வேண்டுமோ அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடவேண்டும். பம்பாய் தமிழ்ச் சங்கம், கல்கத்தா தமிழ்ச் சங்கம், டெல்லி தமிழ்ச் சங்கம் இதில் அக்கரை காட்டி ஈடுபட வேண்டும். திருவள்ளுவர் திருநாளை கருத்து வேறுபாடுயின்றி ஏற்கனவே தமிழகப் புலவர் குழு சார்பில் விடுத்துள்ள வேண்டுகோளின்படி பொங்கலை ஒட்டிய நாளில் **"திருவள்ளுவர் திருநாள்"** அமைத்துக் கொண்டாடுதல் நலம். அவரவர்கள் வசதிக்கேற்ப பல்வேறு நாட்களில் கொண்டாடாமல் ஒரே நாளில் கன்னியாகுமரி முதல் இதயம் வரை கொண்டாடச் செய்தல் வேண்டும், இதில் கண்டிப்பாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் 'திருவள்ளுவர் திருநாளுக்கு அரசாங்கம் விடுமுறை அளிக்கும்'.


இரண்டாவதாக உயர்நிலைச் செல்வாக்கை உபயோகித்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்கா ஆகிய இடங்களில் உள்ள எல்லாத் தூதுவர் நிலையங்களில் "திருவள்ளுவர் திருநாள்" கொண்டாட வேண்டிய முயற்சிகளை இப்பொழுது முதலே தமிழக அரசாங்கம் முனைதல் வேண்டும். தமிழகம் போந்து தமிழ் கற்றுச்சென்ற அறிஞர்கள் மேற்கூறிய நாடுகளில் இருக்கின்றனர், அவர்களோடு தொடர்கொண்டு அந்நாடுகளில் திருவள்ளுவர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வழிவகைகள் காணலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ளுதல் நலம். வள்ளல் பேராசிரியர் கா. நமச்சிவாயர் திருவள்ளுவர் திருநாளை 1933—34-ம் ஆண்டுகளில் எல்லாக் கண்டங்களுக்கும் அறிவித்துக் கொண்டாடினார். அப்பொழுது அவ்விழாவைப் பாராட்டி ஜெர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய அயல்நாட்டு அறிஞர்களின் செய்திகள் வந்தன. இப்பொழுது திரு. ஆ. 2000த்தில் அந்நாடுகளில் எல்லாம் கொண்டாடச் செய்வதில் ஒருவித ஐயோ துன்பமோ இருக்காது என்பது துணிவு.

மூன்றாவதாக: தமிழக நூல் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் திருக்குறள் சம்பந்தமான மொழி பெயர்ப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் இதுவரை வெளியாகியுள்ள அனைத்தும் இடம் பெறுதல்வேண்டும். திரு. ஆ 2000க்குள் எல்லா நூல் நிலையங்களிலும் கண்டிப்பாக இக்கடமையை வேண்டி மேற்கொள்ளச் செய்தல் நலம்.

நான்காவதாக: சிலை அமைத்தோம், படம் திறந்தோம், நூல்கள் அமைத்தோம் என்றதோடு நில்லாது, திருவள்ளுவர் தொடர் ஆண்டினைத் தமிழகம் எங்கனும் நடைமுறைச் செயல்களில் கடைபிடித்தல்வேண்டும். இதுவரைச் சுமார் 22 நாள், கிழமை, திங்கள் இதழ்கள் திருவள்ளுவர் தொடர் ஆண்டினைக் கடைபிடிக்கிறது. மேலும் பலவிதமான அழைப்பிதழ்களிலும் வள்ளுவர் ஆண்டைக் கடைபிடிக்கின்றனர். தமிழகத்தில் வெளியாகும் எல்லா இதழ்களிலும் பிற துறைகளிலும் திருவள்ளுவர் தொடர் ஆண்டினைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வழிவகைகளைச் செய்தாக வேண்டும்.

நாம் இதுவரை 60 ஆண்டு சக்கர வட்டத்தின் கீழ் அமைந்த ஆண்டுக் கணக்கினை வைத்துக் கொண்டு, ஒரு காரியம், அல்லது ஒரு பிறப்பு அல்லது ஓர் இழப்பு முதலிய செய்திகள் ஒரு நள ஆண்டில் ஏற்பட்டால், பின்னர் அச்செயல் எந்த நள ஆண்டில்? என்ற ஐயமும் மருட்சியும் ஏற்படும். இதனைத் தவிர்க்கத் திருவள்ளுவர் ஆண்டினையே கைக்கொள்ளல் நல்லது'

கிறித்தவர்கள் கிறித்துவுக்கு முன் இப்படி இருந்தோம், கிறித்துவுக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்று காட்டுவதுபோல்; தமிழர் ஒப்பு, உயர்வு அற்ற ஒரு சான்றோர், ஒரு முன்னோடி, தலை



மைப் புலவர் வாழ்க்கைச் சட்டத்தை அமைத்துக் கொடுத்த வித்தகர் பெயரால் தொடர் ஆண்டினை மேற்கொள்ளல் விவாதம் அற்ற ஒரு அறச் செயல் ஆகும்.

தமிழர்களும் வள்ளுவருக்கு முன்பு இப்படி இருந்தோம் வள்ளுவருக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்ற சிறந்த இயல்பினை உலகுக்கு எடுத்துக்காட்ட ஏதுவாகும். ஆகவே தக்க தருணத்தில் நாம் இதனை மேற்கொண்டு ஒழுகின் உலக ஓட்டத்தில் அவர்களோடு ஒத்த வகையில் நாமும் பல மைல்கள் கடந்து வந்துள்ளோம் என்ற நிலையை விளக்கம் செய்தவர்களாவோம்.

ஐந்தாவதாக தமிழகம் எங்கணும் உள்ள மன்றங்கள், கழகங்கள், படிப்பகங்கள் அந்தந்த வட்டத்தில் ஒரு இடத்தையும் மறக்காமல் 'வீதிதோறும் சுற்றுலா வந்து திருக்குறள் இல்லாத வீடு தமிழகத்தில் இல்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். குடும்பத்திற்கு ஒரு குறள் நூல் கண்டிப்பாக இருக்கச் செய்ய வேண்டிய வழிமுறைகளைக் காண வேண்டும். இம்மன்றங்கள் அப்படி வீதிதோறும் சுற்றுலா வரும் போது தமிழக வீதிகளில் உள்ள பெயர்ப்பலகைகளில் மொழித் தவறுகள் இல்லாது இருக்கச் செய்ய திரு ஆ. 2000க்குள் அறிவுப் பிரசாரம் செய்தாக வேண்டும்.

ஆறுவதாகத் தமிழக அரசாங்கம் திரு. ஆ. 2000த்தில் ஏதாவது ஒரு அரசினர் கல்லூரியை அரசினர் 'திருவள்ளுவர் கல்லூரி' என்று அழைத்துப் பெருமை கொள்ளவேண்டும்.

ஆகவே தமிழ்ச் சான்றோர்கள், இளைஞர்கள், தாய்மார்கள் இத்தகு பணிகளில் ஈடுபட்டு 'இதோ சிறந்த தமிழகம்' என்று சுட்டிக் காட்டவேண்டும். இச்சீரிய நற்பணிகளை செயல்படுத்தப் பணத்தைவிட ஊக்கம், ஒற்றுமை, அன்பு, விடா முயற்சி, ஆர்வம் மட்டும் இருந்தால் போதும்.

"சேமமுற வேண்டுமெனில் [தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் [செய்வீர்"
"நாமமது தமிழரெனக் [கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ"

என்ற பாரதி எண்ணங்களை நினைவுபடுத்திக் கொள்ளுதல் நலம் பயக்கும்.


—சிறுவை நச்சினார்க்கினியர்

## ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம்.

மார்ச் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—நிர்வாகி


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம்ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# தமிழகத்தின் எதிர்காலம்?

## ஆச்சாரியாரின் மனம் திறந்த பேச்சு!

இந்தி வெறியர்களுக்குப் பாடம் புகட்ட தமிழகத்தில் தி. மு. கழக ஆட்சி ஏற்பட வேண்டும் என்று ஆச்சாரியார் அவர்கள் கூறினார்.

மாநிலங்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற மாரிசாமி அப்துல்சமது ஆகியவர்களைப் பாராட்ட சுதந்திர கட்சி சார்பில் உட்லண்ட்ஸ் ஓட்டலில்



விருந்து நடைபெற்றது.

அந்த விருந்தில் கலந்து கொண்டு பேசுகையில் ஆச்சாரியார் அவர்கள் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் பேசியதாவது:

தேர்தல் முடிவுக்குப் பிறகு அனைவரும் சந்தோஷமாகக் கூடியிருப்பதன் நோக்கம் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களை பாராட்டத்தான். இந்த யுத்தத்தில் நாம் வெற்றிபெற்றது குறித்து எல்லாரும் பேசினார்கள்; சமீப தேர்தல் யுத்தங்களில் நகராட்சித் தேர்தல்களிலும் ராஜ்யசபை தேர்தலிலும் நாம் வெற்றி பெற்றது சின்ன விஷயமல்ல.

இது என்ன நகராட்சித் தேர்தல் ராஜ்சபைத் தேர்தல்தானே! இந்த வெற்றி என்ன பிரமாத வெற்றி; இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே என்று நினைக்கலாம். நான் இந்த வெற்றியை இங்கிருந்து பார்த்ததுடன் சமீபத்தில் வடக்கே டெல்லிக்கும் சென்று வந்தேன். நம்முடைய வெற்றி அதாவது காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள தோல்வி அங்கு ரொம்ப கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

சீன ஆக்கிரமிப்பு-பாகிஸ்தான் யுத்த முஸ்தீபு இவை எல்லாம் ஆட்சியாளர்களுக்கு கலக்கத்தை கொடுக்கும் பகிரங்கமாக பேசப்படும் விஷயம். தி. மு. க.—சுதந்திரா—லீக் இவர்கள் மூன்று பேரும் சேர்ந்து என்னென்னவோ செய்கிறார்களே நமக்கு விளங்கவில்லையே என்ற பயம் அவர்களுக்கு அந்தரங்கமாக ஏற்பட்டுள்ளது.

வடக்கே உள்ளவர்கள் அறியாமையாலும் பிடிவாதத்தாலும் ஒரு தவறான காரியம் செய்கிறார்கள். வலுக்கட்டாயமாக இந்தியைத் திணிக்கிறார்கள். இதைத் தடுக்க நம் மாநில ஆட்சியை எப்படியாவது தி. மு. க கையில் கொடுக்கவேண்டும்.

இந்தி எதிர்ப்பில் தி. மு. க. வினர் என்னைப் போல அல்ல. நான் கொஞ்சம் வெற்றிலைக்கு சுண்ணாம்பு போல இந்தியை மென்று சாப்பிடலாம் என்பவன். ஆனால், அவர்களோ பிறந்தது முதல் இந்தியை எதிர்ப்பவர்கள்.

நம்முடைய தேசத்தில் சில இடங்களில் இந்திக்கு இடமில்லை என்பதை வடக்கே உள்ளவர்கள் உணரச் செய்து ஆங்கில ஜன்னலை திறக்க வேண்டுமானால் சீக்கிரமாக சென்னை ஆட்சி தி. மு. க.வுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தாகவேண்டும்.

எப்படியாவது நாமெல்லாம் ஒன்று சேர்ந்து மெஜாரிடி சம்பாதித்து தி. மு. கழகத்திடம் ஆட்சியை கொடுத்துவிட்டால் என் காரியம் வெற்றி அடையும். நான் இருக்கும்போதே இது நடக்க வேண்டும்.

ஆனால் இதில் எனக்குப் பயமாக உள்ள விஷயம் இது சீக்கிரம் நடந்தாக வேண்டும் என்பதுதான்.

பாஷைக்காகவா அரசியல் என்று கேட்கலாம். அதற்காக ஆட்சியை அவர்களிடமா ஒப்படைப்பது என்று கேட்கலாம். ஆட்சியை ஒப்படைத்தால் தி. மு. க.வினர் தேசத்தைக் கெடுத்து விட மாட்டார்கள்.

காங்கிரஸ்காரர்கள் இப்போது நடத்துவதைவிட மிகவும் நன்றாகவும் நியாயமாகவும் நடத்துவார்கள்.

○

### சிலப்புத் திறன்

# சங்க இலக்கியமும் - திருக்குறளும்

சங்க இலக்கியங்களிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட பிழம்புதான் திருக்குறள். திருக்குறள் அகம் புற நூல்களின் சாற்றையும், உணர்வையும் உயிரையும் புதுக்கி புத்துணர்வோடு தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக்கூறுகிறது. சங்க இலக்கிய மரபிலிருந்து புதிய ஒளிவிட்டு புதுமைச் சுடராக—அறச்சுடராக வெளி வந்தது குறள். குறளின் நோக்கம் அறநெறிகளையும், அறமுறைகளையும் கூறுவது மட்டுமன்று. வாழ்க்கையின் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் இன்ப துன்பங்களையும் சங்க இலக்கியம் போல் எடுத்துக்காட்டி அதனின்று உய்த்துணரப்படும் அற உண்மைகளையும், அறம் புகா வாழ்வு நெறிகளையும் வகுத்துக் காட்டி இலக்கிய மரபில் புதிய பாதை கண்டது திருக்குறள்.

இளம் பருவத்தினின்று மணப்பருவம் அடைந்த ஒருவன் காதலினால் கவரப்படுவதும், பின் கடமையை உணர்வதும், அதனால் பொருளீட்ட எண்ணுவதும் அதைக் கொண்டு புறவாழ்க்கை அமைத்துக் கொள்ளுதலிலே சங்க இலக்கியம் பரககப் பேசும் வாழ்க்கை முறையாகும்.

''இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு'' தொல்காப்பியர் பேசும் முறையும் இதுவேயாகும். இந்த முறையை அறம் பொருள் இன்பம் என்று மாற்றி பொருளுக்கும் இன்பத்திற்கும் அறத்தின் இன்றியமையாமையை உணர்த்தியவர் திருவள்ளுவர். எனவே வள்ளுவர் நூலில் சங்க இலக்கியத்தின் அடிப்படை இருப்பதைக் காண்கிறோம்.

திருக்குறளில் சங்க இலக்கியத்தின் வரிகளையும், கருத்துக்களையும் பல இடங்களில் காணலாம். மலரினும் மெல்லியது காமம் என்று காதலின் மென்மையை திருவள்ளுவர் பேசும்போது 'ஐதே காமம்' என்ற குறுந்தொகை வரி நமக்கு நினைவுக்கு வருகிறது.

"நீரின்றி யமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின்றி மையா தொழுக்கு"

"நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"

என்ற இரு குறள்கள் முறையே

"நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா.........." (நற்-1)

"நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே"

என்ற கபிலரின் வரிகளை நினைப்பூட்டுகின்றன.

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை"

என்ற குறள்

"வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ"

என்ற அடி எடுத்துக் கொடுத்ததாகும்.

இவ்வாறு திருக்குறளுக்கும், சங்க இலக்கியத்திற்கும் உள்ள ஒற்றுமை நமக்கு நன்கு புலனாவதைக் காணலாம். அந்த ஒற்றுமை அடிப்படையிலே நிற்கிறது.

- தமிழோவியன் எம். ஏ.

# அஞ்சா நெஞ்சன் பதில்!

**0 பெரியாரைப்பற்றி உங்கள் அபிப்ராயம்?**

**00 ஆச்சாரியாரிடம் தி. மு. க. சரணுகதியடைந்து விட்டதா?**

**00ப ஷேக் அப்துல்லாவும் காஷ்மீர் பிரச்சினையும்?**

○

**எஸ். பத்மநாபன், சாத்தூர்**

**கே: ராஜாஜி காலில் தி. மு. க. சரணுகதியடைந்துவிட்டதாக தேசிய முற்போக்கு அணியில் இருக்கும் ஒரு கட்சியின் தலைவர் கூறுகிறரே, உண்மையா?**

ப: ஒவ்வொரு சீஸனுக்கு ஒவ்வொரு தலைவரின் காலில் விழுந்து அதே சமயத்தில் மற்ற தலைவர்களைக் கண்டவாறு தாக்கிப் பேசுவதில் பிரசித்திப்பெற்ற பேர்வழிகள், தங்களுக்கிருக்கும் தரக்குறைவான புத்தியே மற்றவர்களுக்கும் என்று எண்ணிப் பேசுவார்களானல் அந்த வசவாளர்களைப்பற்றி பொருட்படுத்த வேண்டியதில்லை.

ஃ

**எஸ். சி. ஆர். கேசவன், சேலம்**

**கே: தி. க. தலைவர் பெரியார் அவர்களைப்பற்றி உங்கள் வெளிப்படையான அபிப்ராயம் என்ன?**

ப: பெரியாரைப் பற்றிக் கூற வேண்டுமானல் எத்தனையோ புத்தகங்கள் எழுதவேண்டுமே, தாங்கள் ஏதோ மிகச் சாதாரணமாகக் கேள்வி கேட்டுவிட்டீரே! என்றுலும் சுருங்கக் கூறி விளங்க வைக்கிறேன்.

பெரியார் மிகவும் நல்லவர்!

அரசியலைவிட அதாவது பொது விவகாரத்தைவிட பணத்தில் கண்ணுங் கருத்துமாயிருப்பவர்!

தி. மு. கழகத்தைப்பற்றி மேடைகளில் பேசுவதற்கு நேர்மாருன அதாவது நல்ல எண்ணம் கொண்டவர்!

காங்கிரசை உறவாடிக்கொண்டே வீழ்த்திவரும் வீரர்!

அரசியல் உலகை தனது உள்ளங் கைக்குள் அடக்கிவைத்துக் கொள்ள வேண்டும் என்ற அலாதி ஆசையினுல், தடம் புரண்டு, தடம் புரண்டு தமது பயணத்தைச் செலுத்திவருபவர்.

தி. மு. கழகம் ஆட்சிபீடத்தில் அமருவதைக் கண்ணுரக் காண வேண்டும் என்ற உண்மையான ஆசை கொண்டிருப்பவர்.

பெரியாருக்கு இரண்டு பேரிடத்தில் அசைக்க முடியாத தனி ஆசை. ஒன்று, காமராசர், மற்ருென்று வெங்காயம்.

ஃ

**எம். ஆர். ரகுபதி, மதுரை.**

**கே: ராஜாஜி, உமது தி. மு. கழகத்தை அளவுக்கு மீறி புகழ்கிறரே, எதற்காக ஓய்!**

ப: எதற்கு என்பதை அவரிடமே கேட்டுப்பாரும். நான் அறிந்தவரையில் அளவுக்கு மீறி புகழ்ந்து கழகத்தை தனது தனி வழிக்குக் கொண்டுவந்து விடலாம் என்று ஆச்சாரியார் அவர்கள் எண்ணுபவரல்ல. கழகத் தலைமையின் தூய்மையையும், உறுதிப்பாட்டினையும் அவர் நன்கு அறிந்தவராவார். அதுபோலவே நமது அண்ணு அவர்கள் அளவுக்கு மீறிய புகழுரைகளைக் கேட்டு மயங்கி விடுபவருமல்ல. எனவே ஆச்சாரியார் தி. மு. கழகத்தைப் புகழ்வதைக் கேட்டு ஆயாசப்படாதேயும். உம் வேலையைப் பாரும் ஓய்!

ஃ

**வி. ஆர். தேவராசன், வேலூர்.**

**கே: உங்கள் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இப்போது எப்படி இருக்கிருர்?**

ப: எங்கள் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். எப்போதும் போல கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டுதானிருக்கிருர் உங்கள் வரட்சி நடிகர் யாராவது யிருந்தால் அவர்களின் போக்கு எப்படி யிருக்கிறது என்று கூர்ந்து கவனியும். இந்தப் பக்கம் வாலை நீட்டாதேயும்.

ஃ

**ஏ. வி. பி. மோகனசுந்தரம், அறவாயில்.**

**கே: ஷேக் அப்துல்லா விடுதலையாவதால், காஷ்மீர் சிக்கல் ஒழுங்காக தீர்ந்துவிடுமா?**

ப: தீர்ந்துவிடக் கூடும் என்று தான் அரசியல் உலகில் அனைவரும் எண்ணுகின்றனர். ஆனல் ஷேக் அப்துல்லா அவர்களால் மட்டும் ஆவது ஒன்றுமில்லை. இந்தியா — பாகிஸ்தான் இரு சார்பிலும், மலிந்துள்ள சந்தேகங்கள் நீங்கப் பெற்று தங்கள் தங்கள் நாட்டின் நல்வாழ்வுக்கும் தன்மானத்திற்கும் இழிவு ஏற்படாத வகையில் விட்டுக் கொடுக்கும் மனேபாவமும் உண்டாக வேண்டும். அப்போதுதான் காஷ்மீர் விவகாரம் இனிதே முடிவுறுவது மட்டுமல்லாமல், இந்தியா — பாகிஸ்தான் இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு ஓங்கி வளரும். அவ்வித நல்லுறவுக்கு ஷேக் அப்துல்லா விடுதலையாவது முழுக்க முழுக்கப் பயன்படும் என்றே நாமும் எதிர்பார்க்கிருேம்.


ஃ

**வி. கே. மருதப்பா, சென்னை.**

**கே: என்னங்காணும்! கம்யூனிஸ்டு கட்சியிலுள்ள இராமமூர்த்தி கட்சியை தி. மு. கழகம் ஆதரிக்குமா?**

ப: அரசியலில் உடனே அரிச்சுவடியாகிலும் படியுங்கள். முறையாக அரசியலை உணருங்கள். அதற்குப் பிறகு கேள்வி கேட்க முற்படுங்கள். கேள்வி கேட்கிருராம் கேள்வி! உமக்கு இந்த கேள்வியைக் கேள் என்று சொல்லிக் கொடுத்தவன்தான் மந்தம் என்ருல் நீர் அதைவிட அசமந்தமாயிருக்கிறீர்களே!

ஃ



**அறிஞர் அண்ணு**

மற்றும் கழகத் தலைவர்கள் — தோழர்கள்

**சிறையில் இன்று**

**148-வது நாள்**

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1